**செய்தி வெளியீடு எண்:883** **நாள்:19.11.2020**

## செய்தி வெளியீடு

தமிழகத்தில் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் பொருளாதார மேம்பாட்டிற்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்குதல், வளம் உருவாக்குதல் மற்றும் வாழ்வாதாரத்தைப் மேம்படுத்துதல் ஆகும்.

தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை தோராயமாக 49.48 இலட்சம் ஆகும். இத்துறையில் தமிழகம், இந்திய அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் தொழில் மற்றும் சேவை துறை சார்ந்த, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில் பேட்டைகள் உருவாகியுள்ளது. அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியபோதிலும், இச்சூழ்நிலையில் எளிய நிதி சேவை மற்றும் சமூக பாதுகாப்பு தேவையாகக் கருதப்படுகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர், சுய உதவி குழுக்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் உள்ளிட்ட அனைவருக்குமான நிதி சேவை மற்றும் போதிய சமூக பாதுகாப்பு, குறித்த காணொளி கருத்தாய்வு மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு அவர்களின் தலைமையில் 19.11.2020 அன்று காலை 11.00 மணிக்கு, மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் காணொளி அரங்கம், எழிலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., ஆணையர், தொழில் மற்றும் வணிகம், துறைசார் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் வல்லுநர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தாய்வின் நோக்கம் அனைத்து வகுப்பினருக்கும், குறிப்பாக சமூகத்தில் பின் தங்கியவர்களுக்குப் போதிய சமூக பாதுகாப்பு மற்றும் எளிய நடைமுறை கொண்ட நிதி சேவை ஆகும்.

**திரு சி. பொன்னையன், மாண்புமிகு துணைத் தலைவர் இக்கருத்தாய்வில் பதிவு செய்த கருத்துக்கள் :**

அனைவருக்குமான எளிய வங்கி சேவை புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். குறிப்பாக, குறைந்த வருவாய் பிரிவினர் நிதி தற்சார்பு பெறுவதற்கு பெரிதும் ஊக்கப்படுத்தும் என மாண்புமிகு துணைத் தலைவர் தெரிவித்தார். மேலும், இச்சேவை மூலம் வழங்கப்படும் கடன்கள் அவர்கள் சிறு வணிக நிறுவனம் தொடங்குவதற்கும் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு தங்களை மேம்படுத்திக்கொள்ள உதவும் எனவும் தெரிவித்தார். தமிழகத்தின் வளர்ச்சியினை மேலும், துரிதப்படுத்த, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான எளிய நிதி சேவை, புதிய தொழில்களை நிறுவுவதற்குச் சாத்தியமாக்கும். எளிய நிதி சேவையினை விரிவாக்கும் தருவாயில் அதிக வேலை வாய்ப்பினை உருவாக்கி பொருளாதாரத்தினை மேம்படுத்தும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலை துறையில் சமூக பாதுகாப்பானது தொழில் முனைவோரது வாழ்வாதாரத்தை உயர்த்தும். பல்வேறு திட்டங்கள் மூலம் தொழில்முனைவோருக்கு கிடைக்கக்கூடிய வங்கி சேவை மற்றும் அனைவருக்குமான எளிமை மற்றும் நடைமுறை சிக்கல் அற்ற வங்கி சேவை கிடைக்க அரசு முயற்சிக்கிறது.

கொரோனா தொற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார சுணக்கத்தில் இருந்து சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீள ஏதுவாக உள்ள அரசு திட்டங்களில் குறிப்பாக Covid Relief and Uplift Scheme and Emergency Credit Line Guarantee Scheme மேற்கோள்காட்டி அதன் சிறப்பம்சங்களை விளக்கினார்.

அனைத்து பிரிவினருக்கும் சமூக பாதுகாப்புடனான எளிய மற்றும் நடைமுறை சிக்கலற்ற நிதி சேவையின் முக்கியத்துவம் குறித்து இக்கருத்தாய்வில் முன்வைக்கப்பட்டது.

தனது நிறைவு உரையில், வங்கிகளும், நிதி நிறுவனங்களும் தங்களது மேம்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் ஆதரவு மூலம், எளிய நிதி சேவை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதால், கூட்டு முயற்சிகள் மூலம், சமூக பாதுகாப்பு அமைப்பினை வலுப்படுத்தி, வளர்ச்சி பாதைக்கு ஈட்டு செல்ல, நிதி சேவை அவசியமாகிறது. மேலும், எளிதில் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை அடையாளம் காணுதல் மற்றும் அப்பொருட்களை சந்தைப்படுத்துதலுக்கு உரிய வழிகளுக்கான காரணிகள், விவசாயப் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டல் மூலம் பொருளாதார மேம்பாடு குறித்து வலியுறுத்தினார்.

துணைத் தலைவர்
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**